TAMIL NADU LEGISLATURE LIBRARY
23 JUN 1972
MADRAS

# தமிழ்நாடு சட்டப் பேரவை.

## வெள்ளிக்கிழமை, 1972 மார்ச் 3.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. நீத்தார் நினைவுக் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் திரு. கே. ஏ. ஷேக் தாவூத், திரு. எஸ். சின்னகருப்ப தேவர், திரு. எம். மாரிமுத்து ஆகியோர் மறைவு குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சேலம்-கோயம்புத்தூர்-நீலகிரி முஸ்லிம் கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1937-ம் ஆண்டிலிருந்து 1939-ம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்த கான் சாகிப் கே. ஏ. ஷேக் தாவூத் அவர்கள் 12—2—1972-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும் :

1952-லிருந்து 1957-ம் ஆண்டு வரை மேலூர் பொதுத் தொகுதியிலிருந்தும், 1957-லிருந்து 1967-ம் ஆண்டு வரை திருப்பரங்குன்றம் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. எஸ். சின்னகருப்ப தேவர் அவர்கள் 26—2—1972-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும் :

தஞ்சாவூர் பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1937-லிருந்து 1939 வரையிலும், பின்பு 1946-லிருந்து 1957-ம் ஆண்டு வரையிலும் தமிழ்நாடு சட்டப் பேரவையின் உறுப்பினராக இருந்த திரு. எம். மாரிமுத்து அவர்கள் 24—2—1972-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும் இப் பேரவையின் சார்பில் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்துவிட்டவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவனமாக நின்றனர்.

## 2. வினாக்கள்—விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### கோவை மருத்துவ மனை ஊழியர்களுக்கு நிகராடை

*276. வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கோவை மாவட்ட மருத்துவ மனையில் பணிபுரிகின்ற (1) M.N.Os. (2) F.N.Os. (3) வாட்டர்மேன், (4) சேனிட்டரி ஓர்க்கர் ஆகியோருக்கு 1970-ம் ஆண்டில் உடை வழங்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், இக் குறையைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) 1970-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் ஜூலை திங்கள் வரை கடைநிலை ஊழியர்களாகிய செவிலிப்பணி உதவியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள், சிற்றூழியர்கள், கடைநிலை ஊழியர்கள் முதலியவர்களுக்கு நிகராடைகள் வழங்கப்பட்டன. வழங்குவதில் சுணக்கம் ஏதுமில்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, செவிலிப் பணி உதவியாளர்களுக்குச் சீருடை வழங்கவில்லை என்று அரசுக்குப் புகார் ஏதாவது வந்ததா? அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு எத்தனை முறை சீருடைகள் வழங்கப்படுகின்றன என்று அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஆண்டுக்கு ஒரு முறைக்குமேல் வழங்குவதற்கு இடம் இருக்காது. ஆனால், 1970-ம் ஆண்டு பிப்ரவரித் மாதத்திலிருந்து ஜூலை மாதம் வரையில், கோயம்புத்தூரிலுள்ள டி.எஸ். அண்ட் பி. லேடீஸ் கார்மென்ட் மேக்கர்ஸ் கோவாப்பரேடிவ் காட்டேஜ் இன்டஸ்ட்ரியல் சொஸைட்டியிடமிருந்து அந்த உடைகள் மூன்று நான்கு மாத காலம் தொடர்ந்து கிடைத்த காரணத்தால், அது கிடைத்து வந்த கால அளவிற்கேற்ப, உடனுக்குடன் வழங்கப்பட்டன,